**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP 21/2024**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் நாள் வியாழக்கிழமை ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுமதி | க/பெ.: | லேட்.வீரமணி |
| கிராமம்: | கச்சனம் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | வீட்டு குடித்தனம் |
| வயது: | 43 | முகவரி: | கச்சனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 03.04.2025.

**முதல் விசாரணை:_**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 05.05.2023 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.2 | 05.05.2023 | பிரேத விசாரணை அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.3 | – | 1ம் எதிர் மனுதாரர் பதிவு சான்று | நகல் |
| ம.சா.ஆ.4 | 23.05.2023 | எனது கணவர் வீரமணியின் இறப்பு சான்றிதழ் ஓட்டுநர் | நகல் |
| ம.சா.ஆ.5 | 12.06.2023 | வட்டாட்சியர் வழங்கிய வாரிசு சான்று | நகல் |
| ம.சா.ஆ.6 | 25.10.2022 | 2ம் எதிர்மனுதாரின் வாகனத்தின் பாலிசி | நகல் |
| ம.சா.ஆ.7 | 20.05.1997 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமத்தின் | நகல் |
| ம.சா.ஆ.8 | 12.05.2023 | எனது கணவர் வீரமணி வாகனத்திற்கான MV. Report. | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.9 | 06.12.1990 | எனது கணவரின் ஓட்டுநர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.10 | – | எனது பெயரில் உள்ள ஆதார் அட்டை ( (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.11 | – | 2–ம் மனுதாரரின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.12 | – | 3–ம் மனுதாரரின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.13 | 2020 – 2021 | எனது கணவர் நடத்தி வரும் என்.ஆர்.வி. சூப்பர் மார்கெட் நிறுவனத்தின் வருமான வரி சான்று | நகல் |
| ம.சா.ஆ.14 | 2021 – 2022 | எனது கணவர் நடத்தி வரும் என்.ஆர்.வி. சூப்பர் மார்கெட் நிறுவனத்தின் வருமான வரி சான்று | நகல் |
| ம.சா.ஆ.15 | 2022 – 2023 | எனது கணவர் நடத்தி வரும் என்.ஆர்.வி. சூப்பர் மார்கெட் நிறுவனத்தின் வருமான வரி சான்று | நகல் |
| ம.சா.ஆ.16 | 02.08.2018 | எனது கணவர் நடத்தி வந்த என்.ஆர்.வி. சூப்பர் மார்கெட் கடையின் பதிவு சான்று | நகல் |
| ம.சா.ஆ.17 | | எனது கணவர் நடத்தி வரும் என்.ஆர்.வி. சூப்பர் மார்கெட் கடைக்கு தொழில் வரி ரசீது | நகல் |
| ம.சா.ஆ.18 | 09.05.2023 | 1ம் எதிர்மனுதாரர் வாகன M.V. Report | நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>3ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

எனது கணவர் டி.எண்.50. ஏடி.7660 பதிவெண் கொண்ட ஈகோ வேனை ஓட்டி செல்லும்போது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான லாரி மோதி விபத்து ஏற்பட்டு மேற்படி விபத்தில் என் கணவர் இறந்துள்ளார். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் லாரி ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கரைதையாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியுள்ளார். இந்த விபத்திற்கு லாரி டிரைவர்தான் காரணம். லாரி இந்த

விபத்திற்கு காரணம் என்பதால், அதன் லாரி உரிமையாளரன 1ம் எதிர்மனுதாரர், அதன் காப்பீட்டு நிறுவனமான 2ம் எதிர்மனுதாரர் ஆகியோர்களிடமிருந்துதான் நான் இழப்பீடு கோருகிறேன் என்றால் சரிதனா். 1, 2 எதிர்மனுதாரர்கள்தான் நான் கோரிய இழப்பீடை கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து ம.சா.ஆ.1 மற்றும் குற்றப்பத்திரிக்கை எனது கணவர் மீதுதான் பதிவு செய்யப்பட்டது. எனது கணவரின் பிரேத விசாரணை இறுதி அறிக்கையில் எனது கணவர் மது அருந்தி இருந்ததாக மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3–ம் எதிர்மனுதாரரை பொறுத்து என் கணவர் 3ம் நபர் அல்ல என்றும், அதனால் அவரது இறப்பிற்காக சமூகம் நீதிமன்றத்தில் நாங்கள் இழப்பீடு கோர இயலாது என்றாலும், 3ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்பதால் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. எனது கணவர் நடத்தி வந்த என்.ஆர்.வி. சூப்பர் மார்கெட் தற்போதும் இயங்கி வருகிறது என்றால் சரிதான். எனது கணவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். விபத்து நடந்த நாளில் எனது கணவருடன் மாருதி ஈகோ வேனில் எத்தனை நபர்கள் சென்றார்கள் என்றால் என் கணவரைச் சேர்த்து 4 நபர்கள் சென்றார்கள். எனது கணவர் ஓட்டிசென்ற வாகனமானது தனியார் வாகனம் என்றும், அது வியாபார நோக்கத்தில் வாடகைக்காக பயன் படுத்தப்பட்டது என்றும், பாலிசி நிபந்தனை மீறப்பட்டுள்ளது என்ற சொன்னால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

எனது கணவர் 10 வகுப்பு வரை படித்து இருக்கிறார். அவர் படித்ததற்கான கல்வி சான்றிதழ், பிறப்பு சான்றிதழ் இருக்கிறதா என்றால் தேடி பார்த்ததால் தான் தெரியும். எனது கணவர் என்.ஆர்.வி. மள்ளிகை கடை வைத்து நடத்தி வந்தார். எனது கணவர் மள்ளிகை கடை நடத்தி வருவதற்கு உரிமம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஆண்டில் எனது கணவர் மேற்படி கடையை ஆரம்பித்தார் என்றால் 2014–ல் ஆரம்பித்தார். 2022–2023 ஆண்டிற்கு எனது கணவருக்கு மொத்த வருமானம் ரூ.4,95,960/– என்றால் சரிதான். கச்சனம் என்பது

ஒரு கிராமம். எனது கணவருக்கு மாதம் ரூ.1,00,000/– வருமானம் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.13 முதல் ம.சா.ஆ.15 வரை உள்ள ஆவணங்களில் என் கணவருக்கு ஆண்டு வருமானம் ரூ.5,00,000/– குறைவாகதான் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது கணவர் இறக்கும் பொழுது என்ன வயது என்றால் 52. எனது கணவரின் இறப்பை நான் நேரிடியாக பார்க்கவில்லை. எனது கணவர் இறந்ததை குறித்து காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் எனது கணவருடன் பயணம் செய்த தாஜுதீன் மகன் பக்ருதீன் என்பவர் புகார் கொடுத்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த புகாரின் அடிப்படையில் தான் திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு காவல் நிலையத்தில் குற்ற எண்.184/2023 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் ஓட்டி சென்ற TN 50 AT 7660 என்ற மாதிரி ECCO கார் என்றால் சரிதான். எனது கணவர் ஓட்டி சென்ற மாருதி காரை அதிவேகமாக ஓட்டி சென்று எதிரே வந்த KL 37 D 3196 என்ற லாரியின் மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்படுத்தியதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த விபத்தில் சமீரா பானு, வீரமணி, ரபீக் ஆகியோர்கள் இறந்துவிட்டார். இந்த விபத்து குறித்து நிலக்கோட்டை உட்கோட்ட காவல் துறை துணை கண்காணிப்பாளர் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரணை மேற்கொண்டு நிலக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் நான்கு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு முன்பாக அதிக அளவில் மது அருந்தி வாகனத்தை சாலை விதிகளை பின்பற்றாமல் அதிவேகமாக ஓட்டியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், எனது கணவரை திண்டுக்கல் அரசு கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்ததில் எத்தில் ஆல்கஹால் இரத்தத்திலும், வயற்றிலும் மற்றும் நுரையீரம், கிட்னி ஆகிய பகுதிகளிலும் எத்தில் ஆல்கஹால் உள்ளதாக அறிக்கையில் குறிபிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் இறந்ததால் மேல் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அதனால் இந்த விபத்தானது எனது கணவர் பயணம் செய்த வாகனமானது 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் தான் எங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் யாதொரு வகையிலும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவன வாகனம் எனது கணவருக்கு சொந்தமானது. அதனால் தான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தையும் ஒரு தரப்பினராக சேர்த்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். அதனால் இந்த விபத்து எனது கணவருடைய கவனகுறைவாலும், அதிவேகமாகவும், மது அருந்தியும் வாகனத்தை இயக்கியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் 1, 2 எதிர்மனுதாரர்கள் எங்களுக்கு யாதொரு வகையிலும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. என் கணவருடைய வருமானத்தை, வயதையும் நிரூபிக்கக்கூடிய அறுதியிட்ட ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இம்மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிக அதிகம் என்றும், அது கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் 1, 2 எதிர்மனுதாரர்களை பொறுத்து இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.